[25th March 1963

(*a*) The construction of quarters for police subordinate staff at Sathiamangalam has been deferred due to National Emergency.

(*b*) Does not arise.

சுண்ணாம்புக் கற்கள் (திண்டிவனம் வட்டம்)

* 360 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டத்தில், கடப்பேரி குப்பம் கிராமத்தில் சுண்ணாம்புக் கற்கள் அதிக அளவில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அங்கு ஒரு சிமிண்ட் தொழிற்சாலை ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) தென் ஆற்காடு ஜில்லாவில் கடப்பேரி குப்பத்திலும் அதன் சுற்றுப்புற கிராமங்களிலும் சுண்ணாம்புக் கற்கள் கிடைக்கின்றன. ஆனால் அவற்றில் சுமார் $3\frac{1}{2}$ மிலியன் டன் கற்கள்தான் சிமெண்ட் தயாரிப்பதற்கு தகுதிவாய்ந்தவையாக இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. மற்றவை மட்ட கத்தைச் சேர்ந்தவையாகும்.

(இ) இங்கு கிடைக்கும் சுண்ணாம்புக்கல் ஒரு சிறிய சிமெண்ட் தொழிற்சாலைக்குக்கூட போதுமானதாக இல்லை.

தொழில்கள் (கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம்)

* 361 கேள்வி—திரு. கரு. சீமைச்சாமி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் தொழில் முன்னேற்றத்துக்காக தனி சலுகை காட்டப்படுகிறதா ?

(இ) ஆம் என்றால், சலுகைகள் யாவை ?

(உ) அதன்படி ஆரம்பிக்கப்பட்ட தொழில்கள் யாவை?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) & (*c*) Licences have been issued for the establishment of four Spinning Mills in the Private Sector, one each at Manamadurai, Paramakudi, Tiruvadanai and Ramanathapuram with 12,000 spindles each. To provide employment to the loomless weavers, the Government have also sanctioned assistance by way of loans and grants for setting up of Industrial Co-operatives, one each at Aruppukkottai, Paramakudi and Karaikudi.

திரு. கே. ஏ. மதியழகன் : சிவகங்கையில் தொடங்கப்பட இருக்கும் தொழில்பேட்டை எப்போது ஆரம்பிக்கப்படும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போதுதான் சாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்.

திரு. கரு. சீமைச்சாமி : ராமேஸ்வரத்தில் சங்கு குளிப்பு வேலை ஆரம்பமாகி ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அங்கு எடுக்கப்படுகிற சங்கு கல்கத்தாவிலுள்ள தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டு அங்கு வளையல்கள், மோதிரங்கள் செய்யப்பட்டு அவற்றிற்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கிராக்கி இருக்கின்றன. ஆகவே ராமேஸ்வரத்தில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : யாராவது முன்வந்தால் அதற்கு வேண்டிய உதவியை சர்க்கார் கொடுக்கும்.

25th March 1963]

புலவர் கா. கோவிந்தன் : வட ஆற்காடு பின்தங்கிய மாவட்டம். வந்தவாசியில் இருந்த கூட்டுறவு நூற்பாலை வேலூருக்கு சென்றிருக்கிறது. ஆகவே மற்றொரு நூற்பாலையை வந்தவாசிப் பகுதிக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இக் கேள்வி கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தைப் பற்றியது.

எண்ணெய் ஆராய்ச்சி (காவிரி வட்டம்)

* 362 கேள்வி.—**திரு. ஆ. துரை அரசன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில், மத்திய அரசினரால் காவிரி வட்டத்தில் எண்ணெய் ஆராய்ச்சி நடத்தப்படுகின்றதா ?

(இ) ஆமென்றால், விபரமென்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) ஆம்.

(இ) காவேரி நதி பிராந்தியங்களில் மத்திய எண்ணெய் வள ஆராய்ச்சியாளர்களால் Seismic Survey நடந்து கொண்டிருக்கிறது. அது இன்னும் சில காலத்துக்கு நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் பட்டுக்கோட்டை பிராந்தியத்தில் மேலும் தீவிர ஆராய்ச்சி செய்ய மேற்கண்ட ஆராய்ச்சியாளர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள்.

பிறநாடுகளில் தமிழ் இலக்கிய வளர்ச்சி

* 363 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ் இலக்கியப் பெருமையை, உலக நாடுகள் எல்லாம் உணர்ந்து பாராட்டுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் தமிழக அரசு மேற்கொண்டிருக்கும் திட்டங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No special schemes have been formulated.

புலவர் கா. கோவிந்தன் : பிற நாட்டு அறிஞர்கள் தமிழின் பெருமையை அறிந்து நம் நாட்டில் அதைக் கற்க வந்திருக்கிறார்கள். இந்நிலையில் உலகில் உள்ள ஒவ்வொரு நாடும் தமிழின் பெருமையை அறிய இங்கிருந்து தமிழ் அறிஞர்களை அனுப்பி தமிழ் இலக்கியப் பெருமையைப் பரப்ப இந்த அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது தமிழின் பெருமையை உணர்ந்து அதைக் கற்றுக் கொள்ளவும் அனுபவிக்கவும் முற்படுகிறார்கள். தமிழ் அறிஞர்கள் பிற நாடுகளுக்கும் அனுப்பப்படுகிறார்கள். இதற்காக பிரத்தியேகமாக அரசாங்கம் ஒரு திட்டத்தை உருவாக்கவில்லை. அப்படி உருவாக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : வடநாட்டில் அலகபாத் போன்ற இடங்களிலுள்ள கல்லூரிகளில் தமிழுக்கு பணம் ஒதுக்கிக் கொடுப்பது போன்று நம் தூதுவராலயங்கள் மூலம் தமிழைப் பரப்ப ஏதாவது முயற்சி செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நம் நாட்டிலே பல்கலைக் கழகங்களுக்கு ஏதோ ஒரு அளவு நிதி உதவி அளிக்கப்படுகிறது. அலகபாத் யூனிவர்சிடி, டெல்லி யூனிவர்சிடி, கேரள யூனிவர்சிடி, ஹைதராபாத் உஸ்மானியா யூனிவர்சிடி, ஆக்ரா யுனிவர்சிடி இவற்றிற்கு நிதி அளிக்கிறோம். வெளிநாடுகளுக்கு நிதி உதவி அளிக்கவேண்டிய அவசியமில்லை.